# 11 ஆம் வகுப்பு – கணினி அறிவியல்

## பாடம் 5. விண்டோஸ் - ல் வேலை செய்தல்

Prepared by,

J. KAVITHA, B.Sc,B.Ed,M.C.A,M.Phil.,

Computer Instructor Gr - I,

GHSS, S.S.KULAM,


Coimbatore.

# கற்றலின் நோக்கங்கள்

- இயக்கஅமைப்பின் கருத்துருக்களைத் தெரிந்து கொள்ளுதல்.
- விண்டோஸ் இயக்கஅமைப்பின் பதிப்புகளை அறிந்து கொள்ளுதல்.
- முகப்புத்திரை மற்றும் சன்னல் திரை கூறுகளின் கருத்துருக்களைத் அறிந்து கொள்ளுதல்.
- பல்வேறு வகையான பணிக்குறிகளை ஒப்பிடுதல்.
- கோப்புகளையும், கோப்புறைகளையும் நிர்வகித்தல்.
- முறைப்படி ஒரு கணிப்பொறியின் இயக்கத்தைத் தொடங்குதல் மற்றும் நிறைவு செய்தல்.

# இயக்கஅமைப்பு ஓர்அறிமுகம்

- இயக்க அமைப்பு என்பது (Operating System) ஒரு அமைப்பு மென்பொருள் (System Software) ஆகும்.
- இது வன்பொருட்களை, மற்ற மென்பொருட்களுடன் தொடர்பு கொள்ளவும், இயக்கவும் வகைசெய்கிறது.
- மேலும், பயனரையும், வன்பொருட்களையும் இணைக்கும் இடைமுகமாகவும், கணிப்பொறியின் அனைத்து இயக்கங்களைக் கட்டுப்படுத்தவும் பயன்படுகிறது.



# விண்டோஸ் இயக்க அமைப்பு - ஓர் அறிமுகம்

- ஒவ்வொரு கணிப்பொறியும் இயங்குவதற்கு ஏதேனும் ஒரு இயக்க அமைப்பு தேவைப்படுகிறது.
- அந்த வகையில் மைக்ரோசாப்ட் விண்டோஸ் மிகவும் பிரபலமான ஒரு வரைகலை பயனர் இடைமுகம் (GUI) ஆகும்.
- விண்டோஸ் - ல் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பயன்பாடுகளை இயகக முடியும் இதற்கு “பல்பணியாக்கம்” (Multitasking) என்று பெயர்.
- விண்டோஸ் இயக்க அமைப்பில் விசைப்பலகை மற்றும் சுட்டி ஆகிய இரண்டையும் உள்ளீட்டு சாதனங்களாக பயன்படுத்தலாம்.
- சுட்டியை பணிக்குறிகளில் கிளிக் செய்வதன் மூலம், விண்டோஸ் கூறுகளுடன் எளிதில் செயல்பட முடியும்.
- விசைப்பலகை, எழுத்துக்கள், எண்கள் மற்றும் சிறப்புக் குறியீடுகளை உள்ளிட பயன்படுகிறது.

# விண்டோஸ் இயக்கஅமைப்பின் செயல்பாடுகள்

- சொற்செயலிகள், அட்டவணைச்செயலிகள், கணிப்பான், விளையாட்டுகள் போன்ற பயன்பாடுளை இயக்குகிறது.
- கணிப்பொறியில் புதிய பயன்பாடுளை நிறுவுவதற்கு பயன்படுகிறது.
- அச்சுப்பொறி, வருடி, சுட்டி, இலக்கவகை கேமரா போன்ற வன்பொருள்களை மேலாண்மை செய்கிறது.
- கோப்பு மறறும் கோப்புறைகள் உருவாக்குதல், பதிப்பாய்வு செய்தல், சேமித்தல், அழித்தல் போன்ற கோப்பு மேலாண்மை செயல்பாடுகளை செய்கிறது.
- கணிப்பொறியின் அமைப்புகளான வண்ணத்திட்டங்கள் , திரைக்காப்பு போன்றவற்றை திரையில் மாற்றியமைக்க பயன்படுகிறது.

# விண்டோஸ் இயக்கஅமைப்பின் பலவகையான பதிப்புகள்

- **விண்டோஸ் 1.x:** 1985
  - 16 பிட்டுகளில் வரைகலை பயனர் இடைமுகம் அறிமுகம் செய்யப்பட்டது.
  - உள்ளீட்டு சாதனமாக சுட்டி அறிமுகமானது.
- **விண்டோஸ் 2.x:** 1987
  - சன்னல் திரையை சிறிதாக்குதல் அல்லது பெரிதாக்குதல் வசதி.
  - கட்டுப்பாட்டகம் அறிமுகம் செய்யப்பட்டது.
- **விண்டோஸ் 3.x:** 1992
  - ”பல்பணி கருத்துரு” அறிமுகமானது.
  - 256 வண்ணங்களை இயக்கும் திறனோடு மிகநவீன வண்ணமயமானது.
- **விண்டோஸ் 95:** 1995
  - தொடக்க பொத்தான், தொடக்கப்பட்டி, பணிப்பட்டை, விண்டோஸ் எக்ஸ்ப்ளோரர் அறிமுகமானது.
  - 32பிட் நுண்செயலி அறிமுகமானது
- **விண்டோஸ் 98:** 1998
  - Internet Explorer என்னும் உலவி அறிமுகமானது.
  - விண்டோஸ் அடிப்படையிலான விளையாட்டுகள் மேம்படுத்தப்பட்டது

- **விண்டோஸ் NT:**
  - வலையமைப்பில் சேவையகமாக வடிவமைக்கப்பட்டது.
- **விண்டோஸ் 2000:** 2000
  - நான்கு பதிப்புகள் வெளியிடப்பட்டன.
- **விண்டோஸ் XP:** 2001
  - 64-பிட் நுண்செயலிகள் அறிமுகம்.
  - விண்டோஸ் தோற்றம் மற்றும் பணித்தளம் மேம்படுத்தப்பட்டது.
- **விண்டோஸ் 7:** 2009
  - ஏரோ பீக், பணிப்ப்டையில் பயன்பாடுகளை இணைத்தல், கையெழுத்து உணர்தல், இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் 8 போன்ற புதிய பயனர் இடைமுக வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது
- **விண்டோஸ் 8:** 2012
  - பல் அடுக்கு நுண்செயலி, தொடுதிரை, மாற்று உள்ளீட்டு முறைகள் போன்ற சிறப்பம்சங்கள் சேர்க்கப்பட்டது.
- **விண்டோஸ் 10:** 2015
  - ஒன்றுக்கும் மேற்பட்ட திரை முகப்பு.
  - ”செயலி அறிவிப்பு” மற்றும் ”விரைவு நடவடிக்கை செயலிக்கான மத்திய அறிவிப்பு மையம்” அறிமுகம்.

# சுட்டியின் செயல்பாடுகள்

| செயல் | விளைவு |
|---|---|
| ஒரு உருப்படியை சுட்ட | சுட்டியை ஒரு உருப்படியின் மீது நகர்த்துதல் |
| கிளிக் | ஒரு உருப்படியின் மீது சுட்டியை வைத்து, இடது பொத்தானை அழுத்தி உடனே விட்டுவிடுதல் |
| வலது கிளிக் | ஒரு உருப்படியின் மீது சுட்டியை வைத்து, வலது பொத்தானை அழுத்த, ஒரு மேல்மீட்புப்பெட்டி பல விருப்பத் தேர்வுகளுடன் தோன்றும் |
| இரு கிளிக் செய்தல் | ஒரு உருப்படியின் மீது சுட்டியை வைத்து இடது பொத்தானை இருமுறை வேகமாக அழுத்தி விடுதல் |
| இழுத்து விடுதல் | ஒரு உருப்படியின் மீது சுட்டியை வைத்து இடது பொத்தானை அழுத்தி பிடித்தவாறு சுட்டியை தேவையான இடம் வரை இழுத்து விடுதல் |

# விண்டோஸின் திரைமுகப்பு

- விண்டோஸின் தொடக்கத் திரை திரைமுகப்பு என அழைக்கப்படுகிறது.



# பணிக்குறிகள் (ICON)

- விண்டோஸின் கூறுகளான கோப்பு, கோப்புறை, குறுக்குவழிகள் போன்றவற்றைக் குறிக்கும் படக்குறியீடு "பணிக்குறி" எனப்படும்.

1. **செந்தரபணிக்குறி:**
   - விண்டோஸ் இயக்க அமைப்பு நிறுவப்படும் போது உருவாக்கப்படும் கொடாநிலை பணிக்குறிகள், செந்தரபணிக்குறிகள் என அழைக்கப்டுகிறது.


   எ.கா: MyComputer, Documents மற்றும் Recycle Bin போன்றவை.

2. **குறுக்குவழி பணிக்குறிகள்:**
   - எந்தவொரு பயன்பாடு அல்லது கோப்பு அல்லது கோப்புறைகளுக்கு குறுக்கு வழி பணிக்கிறிகளை திரைமுகப்பில் உருவாக்கலாம்.

3. **வட்டு இயக்கி பணிக்குறிகள்:**
   - வன்வட்டு (Hard Disk)
   - CD – ROM / DVD வட்டு
   - பென்டிரைவ் (Pendrive)

# சன்னல் திரை


- ஒரு ஆவணம் அல்லது பயன்பாட்டின் பொதுவான செவ்வகப் பகுதி "சன்னல்" திரை எனப்படும்.
- இது குறிப்பிட்ட பயன்பாட்டின் தகவல்களைத் திரையிடுவதற்கு பயன்படும் பகுதியாகும்.



# விண்டோஸ் சன்னல் திரைக்கூறுகள்

- **தலைப்புப்பட்டை**: திறந்துள்ள ஆவணத்தின் பெயர் அல்லது பயன்பாட்டின் பெயர் தலைப்புப் பட்டையில் தோன்றும். மேலும் சிறிதாக்கு, பெரியதாக்கு மற்றும் மூடு பொத்தான்களும் தலைப்பு பட்டையில் உள்ளன.
- **பட்டிப்பட்டை**: தலைப்பு பட்டையின் கீழ் புறம் பட்டிப்பட்டை காணப்படும்.
- **பணித்தளம்**: ஒரு ஆவணத்தில் உரையைத் தட்டச்சு செய்யும் ஆவண சன்னல் திரையின் பகுதி பணித்தளம் ஆகும்.
- **உருளல் பட்டை**: உருளல் பட்டைகள் பணித்தளத்தைச் செங்குத்தாகவும், கிடைமட்டமாகவும் உருள செய்யப் பயன்படுகிறது
- **மூலைகள் மற்றும் எல்லைகள்**: விண்டோஸில் அளவை மாற்றி அமைக்க மூலை மற்றும் எல்லை உதவி செய்கிறது.

# கணினியை ஆராய்தல்




படம் 5.12.தொடக்க பட்டி

# கோப்புகளையும், கோப்புறைகளையும் நிர்வகித்தல்

- **கோப்பு:** கணிப்பொறியில் அனைத்து தகவல்களும் கோப்புகளாக சேமிக்கப்படுகிறது.
- **கோப்புறை:** கோப்புகளை ஒருங்கமைக்க கோப்புறைகள் பயன்படுகிறது.

## கோப்புறைகளை உருவாக்குதல்:

### வழிமுறை 1:

- கம்ப்யூட்டர் குறும்படத்தை கிளிக் செய்து, புதிய கோப்புறையை உருவாக்க விரும்பும் இயக்கியை திறக்கவும்.
- File → New → Folder என்பதை கிளிக் செய்தால் புதிய கோப்புறை, தானமைவாக "New Folder" என உருவாகும்.

### வழிமுறை 2:

- திரைமுகப்பில் மற்றும் தேவையான இடத்தில் சுட்டியின் வலது பொத்தானைக் கிளிக்செய்து, New → Folder என்ற கட்டளையைக் கிளிக் செய்தால் பெயரிடப்படாத new folder கோப்புறை தோன்றும்.

# ஒரு கோப்பு அல்லது கோப்புறைகளைத் சேமித்தல்

பணித்தளத்தில் தட்டச்சு செய்யப்பட வேண்டிய உரையைத் தட்டச்சு செய்து,

- File → Save அல்லது Ctrl + S கிளிக் செய்தால் Save As உரையாடல் பெட்டி தோன்றும்.
- அந்த உரையாடல் பெட்டியில் ஆவணத்தை எங்கு சேமிக்க வேண்டுமோ அதை look –in கீழிறக்குப் பெட்டியில் தேர்வு செய்யவேண்டும்.
- File name என்ற உரைப்பெட்டியில் கோப்பின் பெயரைத் தட்டச்சு செய்து Save பொத்தானைக் கிளிக் செய்ய வேண்டும்.

**Save கட்டளை:** ஒரு கோப்பை முதன்முதலில் கணிப்பொறியில் சேமிக்க **Save** கட்டளை பயன்படுகிறது.

**SaveAs கட்டளை:** ஏற்கனவே சேமிக்கப்பட்ட கோப்பை வேறொரு பெயரில் சேமிக்க **Save As** கட்டளை பயன்படுகிறது.

# ஒரு கோப்பு அல்லது கோப்புறைகளைத் தேடுதல்

- கணினியில் அல்லது குறிப்பிட்ட இயக்கிகளில் உள்ள கோப்பு அல்லது கோப்புறையை விரைவாக தேடுவதற்கு தொடக்கப் பொத்தானிலுள்ள Search பெட்டி பயன்படுத்தப்படுகிறது.

**கோப்பு அல்லது கோப்புறையைக் கண்டுபிடிக்க,**

- Start பொத்தானை கிளிக் செய்தால், தொடக்கபெட்டியின் கடைசியில் Search பெட்டி காணப்படும்.
- அதில், தேடப்பட வேண்டிய கோப்பு அல்லது கோப்புறையின் பெயரை தட்டச்சு செய்ய வேண்டும்.
- குறிப்பிடப்பட்ட பெயரிலுள்ள கோப்பு அல்லது கோப்புறைகள் திரையில் தோன்றும். அதனை கிளிக்செய்தால், கோப்பு நேரடியாக திறக்கும்.
- Search பெட்டிக்கு மேலே “See more results” என்ற மற்றொரு தேர்வும் உள்ளது.
- இந்த தேர்வைக் கிளிக்செய்யும் போது, Search Results உரையாடல் பெட்டி தோன்றும். இதன் மூலமும், கோப்பு அல்லது கோப்புறைகளை தேடி திறக்கலாம்.

# கோப்பு அல்லது கோப்புறைக்கு மறுபெயரிடுதல்

- கோப்பு மற்றும் கோப்புறைக்கு மறுபெயரிடுவதற்கு பல வழிகள் உள்ளன.
- File பட்டி அல்லது இடது சுட்டிப் பொத்தான் அல்லது வலது சுட்டிப் பொத்தானைப் பயன்படுத்தி மறுபெயரிடலாம்.

மறுபெயரிட வேண்டிய கோப்பை தேர்வு செய்து,

  - File -> Rename என்ற பட்டிப்பட்டை தேர்வின் மூலமும்,
  - கோப்பின் மீது வலது கிளிக் செய்து வரும் பட்டியலில் Rename என்ற தேர்வை கிளிக் செய்வதன் மூலமும்,
  - விசைப்பலகையில் உள்ள F2 பொத்தானை அழுத்துவதன் மூலமும் மறுபெயரிடலாம்.

# கோப்பு மற்றும் கோப்புறையை நகலெடுத்தல் அல்லது நகர்த்துதல்

## கோப்பு மற்றும் கோப்புறையை நகர்த்துதல்:

- நகர்த்த வேண்டிய கோப்பு அல்லது கோப்புறையை தேர்ந்தெடுத்து.
- Edit → Cut அல்லது Ctrl + X என்ற சாவி சேர்மானம் அல்லது வலது சுட்டி பொத்தானை அழுத்தினால் தோன்றும் மேல் மீட்புப் பட்டியில் Cut என்பதை தேர்வு செய்ய வேண்டும்.
- கோப்பு அல்லது கோப்புறையை புதிய இடத்திற்கு நகர்த்துவதற்கு Edit→ Paste அல்லது Ctrl + V என்ற சாவி சேர்மானம் அல்லது வலது சுட்டி பொத்தானை அழுத்தினால் தோன்றும் மேல் மீட்புப் பட்டியில் Paste என்பதை தேர்வு செய்தால், கோப்பு புதிய இடத்திற்கு நகர்த்தப்படும்.

# கோப்பு மற்றும் கோப்புறைகளை நகலெடுத்தல்

- நகலெடுக்க வேண்டிய கோப்பு அல்லது கோப்புறையை தேர்ந்தெடுத்து.
- Edit → Copy அல்லது Ctrl + C என்ற சாவி சேர்மானம் அல்லது வலது சுட்டி பொத்தானை அழுத்தினால் தோன்றும் மேல் மீட்புப் பட்டியில் Copy என்பதை தேர்வு செய்ய வேண்டும்.
- கோப்பு அல்லது கோப்புறையை புதிய இடத்தில் ஒட்டுவதற்கு Edit→ Paste அல்லது Ctrl + V என்ற சாவி சேர்மானம் அல்லது வலது சுட்டி பொத்தானை அழுத்தினால் தோன்றும் மேல் மீட்புப் பட்டியில் Paste என்பதை கிளிக் செய்ய வேண்டும்.

# நகர்த்துதல் மற்றும் நகலெடுத்தல்- க்கு உள்ள வேறுபாடுகள்

| நகர்த்துதல் | நகலெடுத்தல் |
|---|---|
| கோப்பு அல்லது கோப்புறைகளை மூல இடத்திலிருந்து புதிய இடத்திற்கு நகர்த்துதல் வெட்டுதல் எனப்படும் | கோப்பு அல்லது கோப்புறைகளின் பிரதியை புதிய இடத்திற்கு நகர்த்துதல் நகலெடுத்தல் எனப்படும். |
| மூலக் கோப்புகள் அழிக்கப்படும்.<br><br>கட்டளை:<br>Edit → Cut (or) Ctrl + X<br>Edit → Paste (or) Ctrl + V | மூலக் கோப்புகள் அழிக்கப்படுவதில்லை.<br><br>கட்டளை:<br>Edit → Copy (or) Ctrl + C<br>Edit → Paste (or) Ctrl + V |

# மறுசுழற்சி தொட்டி (Recycle bin)

- மறுசுழற்சி தொட்டி என்பது, பயனரால் நீக்கப்பட்ட கோப்பு அல்லது கோப்புறைகளை, தற்காலிகமாக சேமித்து வைக்க பயன்படும் சிறப்பு கோப்புறையாகும்.
- அழிக்கப்பட்ட கோப்புகளை மீட்டெடுக்க இது மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- மறுசுழற்சித் தொட்டியிலுள்ள கோப்புகள் மற்றும் கோப்புறைகளை மீட்டெடுக்காமல் இயக்க முடியாது.

மறுசுழற்சி தொட்டியிலுள்ள ஒரு கோப்பு அல்லது கோப்புறையை மீட்டெடுத்தல்:

- திரைமுகப்பிலிருந்து மறுசுழற்சி தொட்டியைத் திறந்து, மீட்டெடுக்கவேண்டிய கோப்பு அல்லது கோப்புறையின் மீது வலது கிளிக் செய்தால் தோன்றும் மேல்மீட்புப் பட்டியிலிருந்து, Restore என்பதை கிளிக் செய்ய வேண்டும்.



## முகப்புத்திரையில் குறுக்கு வழி பணிக்குறிகளை உருவாக்குதல்.

- நமது வேலையைத் தானியங்கியாக மாற்றுவதற்கு நமக்கு அடிக்கடி பயன்படும் கோப்புகள் மற்றும் கோப்புறைகளின் குறுக்கு வழிகளை உருவாக்கி, அதை முகப்புத்திரையில் வைக்கலாம்.
- முதலில் கோப்பு அல்லது கோப்புறையை தேர்வு செய்து, அதன் மீது வலது கிளிக் செய்ய வேண்டும்.
- அப்பொழுது ஒரு மேல்மீட்புப் பட்டி தோன்றும். அதிலிருந்து Send to → Desktop (Create Shortcut) என்ற தேர்வை கிளிக்செய்தால் விண்டோஸ் திரைமுகப்பில், கோப்பு அல்லது கோப்புறையின் குறுக்குவழி பணிக்குறி தோன்றும்.

# ஒரு கணிப்பொறியிலிருந்து முறையாக வெளியேறுதல்

அனைத்து பயன்பாடுகளையும் மூடிவிட்ட பின்னர், கணிப்பொறியின் இயக்கத்தை முறையாக நிறுத்தி விட்டு வெளியேற வேண்டும்.

Logoff/shutdown செய்ய: Start → log off அல்லது Start → Shut down கிளிக் செய்ய வேண்டும். ஏதேனும் திறந்த நிரல்கள் இருக்குமாயின் அதைமூடச் சொல்லி விண்டோஸ் கேட்கும், அவ்வாறு மூடாமல் விட்டால் கட்டாயப்படுத்தி (Force Shut Down) மூடும், அதனால் சேமிக்காத தகவல்களை இழக்க நேரிடலாம்.

**Switch User:** அடுத்த பயனர் கணக்கினுள் திறக்கப்பட்ட நிரல்கள் மற்றும் விண்டோஸின் செயல்களை மூடாமலே நுழைய விண்டோஸ் வழி வகுக்கும்.

**Restart :** கணிப்பொறியை மறு தொடக்கம் செய்வது.

**Sleep:** குறைந்த மின் சக்தியில் கணிப்பொறி இயக்க இந்த நிலை பயன்படும். சூப்பர்விரைவு மறு தொடக்கத்திற்கு விண்டோஸ்-யைக் கணினியின் நினைவகத்தில் இருந்து திறக்கும்.

**Hibernate:** குறைந்த சக்தியில் கணிப்பொறி இருக்கும் போது எல்லா இயங்கும் நிரல்களும் விரைவு மறு தொடக்கத்திற்கு கணினியின் வன்வட்டில் விண்டோஸைத் திறக்கும்.

# மதிப்பீடு

1. இயக்க அமைப்பு என்பது ஒரு __________ ஆகும்.
   அமைப்பு மென்பொருள் (System Software)
2. மைக்ரோசாப்ட் விண்டோஸ் மிகவும் பிரபலமான ஒரு ________ஆகும்.
   வரைகலை பயனர் இடைமுகம் (GUI)
3. விண்டோஸ் - ல் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பயன்பாடுகளை இயகக முடியும் இதற்கு _________என்று பெயர்.
   பல்பணியாக்கம் (Multitasking)
4. விண்டோஸ் இயக்கஅமைப்பின் செயல்பாடுகள் சிலவற்றைக் கூறு.
   - கணிப்பொறியில் புதிய பயன்பாடுளை நிறுவுவதற்கு பயன்படுகிறது.
   - கோப்பு மறறும் கோப்புறைகளை மேலாண்மை செய்கிறது
5. விண்டோஸ் இயக்கஅமைப்பின் பதிப்புகள் சிலவற்றைக் கூறு.
   - விண்டோஸ் 95
   - விண்டோஸ் 98
   - விண்டோஸ் 7
   - விண்டோஸ் 8
   - விண்டோஸ் 10

6. விண்டோஸின் தொடக்கத் திரை __________என அழைக்கப்படுகிறது.

திரைமுகப்பு

7. விண்டோஸ் இயக்க அமைப்பு நிறுவப்படும் போது உருவாக்கப்படும் கொடாநிலை பணிக்குறிகள் ____________என அழைக்கப்டுகிறது.

செந்தரபணிக்குறிகள்

8. ஒரு ஆவணம் அல்லது பயன்பாட்டின் பொதுவான செவ்வகப் பகுதி _______________ எனப்படும்.

சன்னல் திரை

9. விண்டோஸ் சன்னல் திரைக்கூறுகள் யாவை?

- தலைப்புப்பட்டை
- பட்டிப்பட்டை
- பணித்தளம்
- உருளல் பட்டை
- மூலைகள் மற்றும் எல்லைகள்

10. தலைப்பு பட்டையில் உள்ள பொத்தான்களைக் கூறு.


சிறிதாக்கு, பெரியதாக்கு மற்றும் மூடு பொத்தான்கள்

# முக்கிய வினாக்கள்:

1. பல்பணியாக்கம் என்றால் என்ன ?
2. விண்டோஸ் இயக்கஅமைப்பின் செயல்பாடுகள் யாவை?
3. விண்டோஸ் இயக்கஅமைப்பின் பலவகையான பதிப்புகளை விவரி.
4. செந்தரபணிக்குறி என்றால் என்ன ?
5. விண்டோஸ் சன்னல் திரைக்கூறுகளைப் பற்றி குறிப்பு வரைக.
6. கோப்பு மற்றும் கோப்புறைக்கு உள்ள வித்தியாசங்கள் யாவை?
7. ஒரு கோப்புரையை உருவாக்கும் இரண்டு வழிமுறைகளை எழுதுக.
8. Save மற்றும் Save As - க்கு உள்ள வித்தியாசங்கள் யாவை?
9. ஒரு கோப்பு அல்லது கோப்புரையை தேடிக்கண்டுபிடிக்கும் பல்வேறு வழிமுறைகளை விளக்குக.
10. ஒரு கோப்பை எவ்வாறு மறுபெயரிடுவீர்கள்?
11. வெட்டுதல் மற்றும் நகலெடுத்தல்- க்கு உள்ள வேறுபாடுகள் யாவை?
12. மறுசுழற்சி பெட்டியை பற்றி ஒரு குறிப்பு வரைக.
13. விண்டோஸ் இயக்க அமைப்பில் குறுக்கு வழி பணிக்குறிகளை உருவாக்கும் செயல் முறையை விளக்குக.

# நன்றி!

இந்த உலகத்தையே
மாற்றக்கூடிய சக்தி
வாய்ந்த கருவி
**கல்வி தான்.**
அக்கல்வியை
பெற்று சிறப்போடு
வாழ
**வாழ்த்துக்கள்.**



J. KAVITHA, B.Sc, B.Ed, M.C.A, M.Phil.,
Computer Instructor Gr ~ I
GHSS, S.S.KULAM
Coimbatore – 641107.